செ.வெ.எண்: 61 நாள்:24.06.2016

# பத்திரிக்கை செய்தி

## தமிழ்நாடு அரசு
## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இணைய தள முகவரி
## https://tnvelaivaaippu.gov.in

1. இத்துறையின் இணையதள முகவரி வாயிலாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் நேரடியாக செல்லாமல் இந்த இணையதளம் வழியாக பதிவு, புதுப்பித்தல்கள், கூடுதல் தகுதிகள் ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.
2. வேலைவாய்ப்பற்றோருக்காக இவ்வலுவலக மூலம் வழங்கப்படும் உதவித் தொகை விவரங்களுக்கான தகுதிகளை படித்து அதற்கான விண்ணப்ப படிவங்களை பதிவிறக்கம் செய்யலாம்.
3. மாவட்ட அளவில் மேற்கொள்ளப்படும் பதிவுமூப்பு விவரங்களை Seniority என்ற தலைப்பின் கீழ் அறிந்து கொள்ளலாம்.
4. Grievance redressal என்ற தலைப்பில் முறையீடு ஏதுமிருப்பின் அதனை பதிவு செய்யலாம்.
5. அவ்வப்போது அரசு, அரசு சார்பு பொதுத்துறை நிறுவனங்களால் வெளியிடப்படும் பணிக்காலியிட அறிவிப்புகள் அவற்றுக்கான வயது, எண்ணிக்கை, கல்வித்தகுதி உள்ளிட்ட விவரங்களுடன் போட்டித் தேர்வுகள் தொடர்பான விவரங்களும் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அவற்றை பார்வையிட்டு உரிய நிறுவனங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
6. போட்டித் தேர்வுகளுக்கு உரிய பாடத்திட்டங்கள், அவற்றுக்கு படிக்க வேண்டிய பாடங்கள், புத்தகங்கள் ஆகியவற்றின் விவரம் அளிக்கப்பட்டுள்ளது.
7. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் மூலம் நடத்தப்படும் பல்வேறு பயிற்சி விவரங்களும் விண்ணப்பபடிவமும் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அளிக்கலாம்.

எனவே,புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் https://tnvelaivaaippu.gov.in என்ற இணையதளத்தை அடிக்கடி பார்வையிட்டு பயன்பெற வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**